ஸ்ரீ திரிபுரசுந்தரீ ஸமேத ஸ்ரீசந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

फलान्वितो धर्मयशोर्थनाशनस्सचेदपार्थः स्वशरीरतापकः ।
न चेहचामुत्र हिताय यःसतां मनांसिकोपस्स समाश्रयेत्कथम् ॥

கோபமுண்டாகி அது பயனுடையதாய்விடுமாகில் தர்மம், யசஸ், (கீர்த்தி) அர்த்தம், (பொருள்) இவைகளை நாசமாக்கிவிடும். அந்த கோபம் பயனற்றதாய்விடுமாகில் தன் சரீரத்தையே எரித்துவிடும். ஆகவே இம்மையிலும் சரி, மறுமையிலும் சரி, அது ஹிதத்தைத் தருவதாயில்லை. இந்தக் கோபம்ஸாதுக்களின் மனதை எப்படி ஆசிரயிக்கும்? ஸாதுக்களின் மனதில் கோபமே உண்டாகாதெனக் கருத்து. ஜனங்கள் பிரியமாகத் தோன்றின வஸ்துவில் ஆசைக்கொள்வதும், அது எவராலேயாவது தடைபட்டால் உடனே அவரிடம் கோபங்கொள்வதும் ஸஹஜமாகக் காணப்படுகின்றது. ஆனால் அப்படி கோபத்தை அடையும்பொழுது முடிவில் அதனால் ஏற்படக்கூடிய பயனைப்பற்றி விசாரிக்க மனது இடம் கொடுப்பதில்லை. எதிராளியின் சக்தி முதலியவற்றையும் கெவனிப்பதில்லை. அவஸரப்பட்டுக் கண்டபடி பேசிவிடுவதிலும், தோன்றினபடி நடத்திவிடுவதிலும் துணிந்து விடுகிறார்கள். ஆலோசிக்காமல் செய்வதினால் பின்னிட்டுப்பலவித கஷ்டங்களை அனுபவிக்கிறார்கள். அப்படிக் கஷ்டப்படும்பொழுது "கொஞ்சம் ஆலோசியாமல் செய்துவிட்டோம்" என்று நினைக்கிறார்கள். அதனாலென்ன பயன்? முந்தியே கெவனித்துச் செய்வதல்லவா உசிதம். அப்படியில்லாமையால் கண்டவன் காலில் விழவேண்டியதாகிறது. கண்டவனிடமெல்லாம் நல்லவார்த்தைசொல்ல வேண்டியதாகிறது. ஒட்டுச்சில்லுமாதிரி காசைச் சிலவழிக்கவேண்டியதாகிறது. கையிலில்லாவிட்டாலும் கடன்வாங்கியாமது சிலவழிக்கும்படி நேர்ந்துவிடுகிறது. இந்த நிலைமையில் தர்மாசரணம்செய்ய முடியாமல்போய்விடுகிறது. இப்படி ஸ்வதர்மமும்கெட்டு, கைக்காசும் தொலைந்து கடன்கொடுத்தவன் விரட்டவே பரம்பரையாய் வந்தபெயரும் கீர்த்தியும் போய்விடுகிறது. இவ்வளவும் கோபத்தின்பயன் வந்தபோது ஸம்பவிக்கின்றது. கோபம் பயன்படாவிடில் அவமானப்பட்டு தாபப்படும்படியாகிறது. இது அஸாதுக்களின் வழக்கம். ஸாதுக்களானால் இப்படி வைத்துக்கொள்ளமாட்டார்கள். பாக்கிய வசத்தால் கிடைத்ததே போதுமென்று சாந்தமாயிருப்பார்கள். ஒருவாறு பிராரப்த கர்மத்தால் தூண்டப்பட்டு ஏதாவதொன்றில் ஆசைகொண்டாலும் உசிதமான வழியில் அதை அடைய சாஸ்திரீயமார்க்கத்தில் ப்ரவிருத்திப்பார்கள். கிடைத்தால் ஸந்தோஷப்படுவார்கள். கிடைக்காவிடில் கோபங்கொள்ளவே மாட்டார்கள். கோபத்தின் தோஷத்தைப் பலவழியாலும் தெரிந்து கொண்டிருப்பார்களாகையால் கோபத்திற்கு வசப்படுவதேயில்லை. ஸ்வப்நத்திலும் தன்மனதில் கோபத்திற்கு இடங்கொடுக்கவேமாட்டார்கள். அதனால் சமசுகமே அவர்களுக்குக் கிடைக்கும். யாவரும் அந்த வழியையே பின்பற்றி கோபத்திற்கு இடம்கொடுக்காமல் சாந்தநிலையிலிருப்பார்களாக. சுபம்

பத்திராதிபர்.

ஆர்ய தர்மம்.

ஆங்கிரஸ ௵ சித்திரை ௴ ௨௨

காமக்குரோதங்களுக்கு இடங்கொடுக்கக்கூடாது.

சுபவாஸனைகள் ஆச்ரயிப்பதற்காக பரமேச்வரன் மனதைப்
படைத்திருக்கிறார். அதனால் பிராணிகள் மோக்ஷபர்யந்தமான
புருஷார்த்தங்களை யடையட்டும் என்ற அபிப்பிராயமாம். இதை
அறியாமல் சிலர் காமக்குரோதாதி துஷ்டவிருத்திகளுக்கு மன
தில் இடங்கொடுத்து விடுகிறார்கள். அதனால் பூர்வபுண்ணிய
வசத்தால் கிடைத்த புனிதமான பிராமண சரீரத்தையும் பாழாக்கி
விடுகிறார்கள். பிராணிகளுக்கு பிரியப்பட்டபொருள் கிடைக்கும்
பாக்கியம் இருக்குமானால் தானாகவே கிடைக்கின்றது. ஆசைப்
படுவதால் என்னபயன். ஆசைப்படுவதனாலே மாத்திரம் இஷ்டப்
பட்டபொருள் கிடைத்துவிடுமாயின் குறைவுடையோரைக் காண்
பதே அரிதாகும், ஏராளமான நெல்விளையும் பூமியைவைத்துக்
கொண்டு அதில் கிரிஷி கார்யம் ஒன்றையும் செய்யாமல் ஆயிரம்
பதினாயிரம் கலம் நெல் வேணுமென்று ஆசைப்படுவதினால் மாத்
திரம் வேண்டியநெல் கிடைத்துவிடுமா? அதுபோலவே மற்ற
விஷயங்களிலும் ஆசைகொள்வதினால் மாத்திரம் யாதொருபய
னுமில்லை. அததற்குரிய ஸாதனங்களைச்சரிவா செய்தாலல்லவா
அந்தந்த பலன் கிடைக்கும் அப்படித்தான் உலகத்தில் கண்டி
ருக்கிறோம். பதார்த்தங்களைப்பார்க்கும்போது அதன்சௌந்தர்யா
திசயத்தால் ஆசையுண்டாய்விடும். அப்படியுண்டானால் அதற்குரிய
ஸாதனங்களை யனுஷ்டிக்க சிரத்தையும் திறமையும்வாய்ந்தவராயின்
அந்தப் பயனை யடைந்து சுகப்படலாம், சக்தி இல்லாவிடில்
வைராக்யாதிகளால் அந்த ஆசையை யடக்கிக்கொள்வதே நல்லது.
ஆசையையடக்கிவிட்டால் அதற்குமேலுள்ள துஷ்ட விருத்திகளை
கிளப்பிவிடாது. ஒரு பிறவியில் சுகப்படவேணுமென்று நினைத்
தவன், அதற்கு முந்திய பிறவிகளிலேயே பாடுபட்டு புண்ணியத்
தைச் செய்திருக்கவேண்டும். ஒட்டுமாம்பழம் தின்னவேண்டு

மென்று ஆசைகொண்டால் பலவருஷங்களுக்கு முந்தியே மாமரம் வைத்து வளர்த்துவரவேண்டும். அல்லது அந்தப்பழமுள்ளவிடத்தில் அதை வாங்கவேண்டிய கருவிகளுடன் செல்லவேண்டும், அப்படியானால் அது கிடைக்கும். இதுபோல் புத்திர, பௌத்திர, பசு, தன, தான்யாதிகளான பலன்கள் கிடைக்கவேண்டுமானால் பூர்வ ஜன்மத்திலேயே புண்ணியம் செய்யவேண்டும், அல்லது இவைகளைத் தரக்கூடிய சக்திவாய்ந்த மகான்களின் ஸன்னிதியில் தவம் புரிந்து நிற்கவேண்டும். அப்படிக்கில்லாதவன் ஆசைக்கு இடம் கொடுக்கக்கூடாது. ஆசைகொண்டவன் அழுதே திரிவான் என்பதற்கு அத்தாக்ஷியான சரித்திரங்கள் புராணங்களில் பலவுண்டு. தற்பொழுதும் பலருடைய சரித்திரமும் கண்கூடான ஸாக்ஷியாகும். ஸாதுக்களின் ஸகவாஸம் பால்யம் முதற்கொண்டே நேரிட்டிருந்தால் இந்த கெட்ட ஆசை உண்டாகவே மாட்டாது. தற்போதோவெனில் ஆர்யச் சிறுவர்களையும் பால்யம் முதற்கொண்டே பேராசைப் பிடித்தவர் படிப்பிலேயே விட்டு அதிலேயே பழக்கிவிடுகிறார்கள். அதனால் குழந்தைகளும் கஷ்டப்படுகிறார்களேயன்றி சுகப்படுவதைக்காணோம். அதனால் அவரவர்களும் தம்தம் குழந்தைகளை குற்றமற்றதும் குணமுடையதுமான குலபாரம்பரையாய்வந்த காரியத்திலேயே பழக்கிவருவார்களாக. சுபம்.

பத்திராதிபர்'

ஹரிஹரபக்த சமூக ஜனங்களின் ஓர் விக்ஞாபனம்.

மகான்களே!

பிரும்மஸ்ரீ "ஸ்ரீவத்ஸ, வே. சோமதேவசர்மா" என்பவரை நமது "ஆர்யதர்ம பத்திரிகை" மூலமாக அறிவோம். அறிந்தவரையில் அவர், வித்தியா, புத்தி, சக்தி, வாக்சாமர்த்தியம், முதலிய உத்தம குணமுள்ளவராகவே அறிகிறோம். இவர் "ஆரிய தர்மம்" 16-வது புத்தகம் ஆனிமீ 4௳ 21-வது ஸஞ்சிகையில் "பிரஜோத்பத்தி வருடத்தில்சென்னை ஸ்ரீமடத்தில் நடந்த ஸ்ரீ சங்கரஜயந்தி"யன்று பல ஆஸ்திகர்கள் கோறியபடி ஸ்தோத்திரம் முதல் சூத்ரபாஷ்யம் வரையிலுமுள்ள அபூர்வமான உபதேசங்களைத் தமிழில் சுருக்கமாகச் சித்திரைமாதம்முதல் மாதசஞ்சி

கையாக வெளியிடும்படி தீர்மானித்தபடி இரண்டுமாத ஸஞ்சிகை கள் வெளிவந்திருக்கின்றன. அதற்கு வருடசந்தா ரூபாய் இரண்டு வைத்திருக்கிறது. இதுவரை பல கிரந்த தத்துவசாரங் கள் வெளிவந்திருக்கின்றன. விரும்புவோர் "சர்மா" அவர் கள் விலாசத்திற்கு ரூ. 2 அனுப்பிப் பெறுக என்று வெளியிட் டிருக்கிறார்.

மற்றொரு சமயத்தில் இவரே "ஆரியதர்மம்" ஷ புத்தகம் ஐப்பசி 27உ 40-ஸஞ்சிகையில் "சூதபௌராணிகர்" என்ற நாமதேயத்துடன் 18-புராணங்களையும் தமிழில் சுருக்கமாக வும் ஷ சர்மா அவர்களை ஆசிரியராகக்கொண்டும் மாதஸஞ்சிகை யாக வெளியிட "ஸ்ரீமடம் புராணப்ரவசன" சபையார் உத்தே சித்திருக்கின்றனர் என்றும், குறிப்பிட்ட தேதியில் அச்சுச் சிலவுகளுக்கு வருடசந்தா ரூபாய் ஒன்று அனுப்பினால் அவ்வி தம் 500 சந்தாவுக்குக் குறையாமல் இருந்தால் இக்காரியத்தில் பிரவேசிக்கலாமென்பது எண்ணமென்றும், சந்தாவாகச் சேர்ந் தவர்கள் பலரைச் சேர்ப்பதாகவும் ஷயாருக்கு கடிதமூலமாக உத்ஸாகம் ஊட்டினாலொழிய, ஆஸ்திகர்களின் ஆதரவை எதிர் பார்ப்பதாகவும் அச்சு முதலிய சிலவுகள் அபரிமிதமாக ஆகின் றன. தனமில்லாவிட்டால் எக்காரியமும் நடப்பதில்லை. "தேஹி" என்று கேட்பது நமக்கு வழக்கமில்லை என்றும் வெளியிட் டிருக்கிறார்.

இஃதைக் கண்டவுடன் ஷ ஸஞ்சிகைகளில் ஆசைகொண் டும், சகாயம்செய்யக் கருதியும், எங்கள் சமூக சிகிரிட்டரியைக் கொண்டு சாம்பிள் காப்பிக்கு எழுதச்சொன்னதோடுகூட

P. S. Subbaramania Iyer, B. A., L T.
Teacher Government English High School
Kottarakara.

என்ற விலாசதாரை சந்தாவாகச்சேர்ந்து ஷ சஞ்சிகையை வருத்த சிபார்சு செய்தும், எழுதச்சொன்னோம். பிறகு பண்டிட் சங்கராமசர்மா அவர்களைக்கொண்டும், தன் விலாசத்திற்கே எழுதி அனுப்பச்சொன்னதிற்கும் நாளதுவரை, ஷ சர்மா அவர்களிடமிருந்து மறுபடி ஒரு கடிதமாவது, பத்திரிகையா வது வராததால் மிகவும் விசனமடைகிறோம். சந்தாத் துகையை

முன் பணமாக அனுப்பி என் சஞ்சிகையை அனுப்ப எழுதக் கூடாது என்றுலோ அதற்கு பல காரணங்களிருககின்றன.

ஆனிமாதத்தில் 2மாத சஞ்சிகைகள் வெளிவந்திருப்பதா யும், எழு மாதத்திற்குப் பிறகு தைமாதத்தில் தனமில்லாமல் எக்காரியமும் நடப்பதில்லை "தேகி" என்று கேட்பதும் நமக்கு வழக்கமில்லை என்றும் அவரே எழுதி இருப்பதாலும் 13-வது புஸ்தகம் 9-வது ஸஞ்சிகையில் யு. பீ. கிருஷ்ணமாசாரியார் அவர்கள் வர்ணாசிரம தர்மமாகநாட்டின் விஷயமும் ஸ்ரீமான் சோமதேவசர்மாவும் என்ற தலையங்கத்துடன் வெளியிட்டிருக் கும் வியாஸத்திலிருந்தும், 17வது புத்தகம் தை மாதம் இரண் டாவது ஸஞ்சிகையில் ஸ்ரீ சங்கரோபதேசரத்னம் என்ற ஸ்ரீமான் சோமதேவ சர்மாவால் வெளியிட்டுவருகிற மாத சஞ்சிகை ஆசாரிய பாதகமலங்களில் சமர்ப்பிக்கப்பட்டு அனுக்ரமாக சன் னிதானத்திலே இருந்து ஸ்ரீமுகம் அனுப்பப்பட்டதென்றும் உண்மை விளம்புவோன் வெளியிட்டிருப்பதிலே இருந்தும் ஷை சர்மா அவர்களினால் வெளியிடப்பட்ட சஞ்சிகைதுடங்கி மாதம் தப்பாமல் சரியாய் வெளியாவதில்லை என்பது நிச்சயமாகிறது. இக்காரணங்கள் பற்றியே சாம்பிள்காப்பி அனுப்பும்படி மூவ ரும் எழுதினோம். சர்மா அவர்கள் நன்முயற்சி சபலமாகவேணு மென்ற அபிமானத்தாலும், சஞ்சிகையிலுள்ள பிரேமாவேசத் தாலும், சிநேகத்தாலும், எழுதினோமேதவிர வேறு யாதொரு எண்ணமுமில்லை என்று தெரிவித்துக் கொள்கிறோம்.

நாங்கள் அடைந்த சந்தேகம்போல பலரும் சந்தேகம் கொள்வது உலக சகஜமானபடியால் இந்த விக்ஞாபனமானது கசடற சந்தேக நிவர்த்தியைச் செய்யுமென்றும் அதனால் சர்மா அவர்களின் சஞ்சிகைக்கு சந்தாதார்கள் நம்பிக்கையுடன், பெருகிவருவார்களென்றும், இதினின்றும் குணமே அதிகம் உண்டாகுமென்றும் எங்கள் முயற்சி சபலமாய்விடுமென்றும், உபதேச ரத்தினம் ஓட்டோடியும் வருமென்றும் உறுதியாய் ஊக் கத்துடன் எதிர்பார்த்திருக்கிறோம்.

காரியதரிசி,

ஹரிஹர பக்தசமூகம், கோட்டாரக்கரை.

ஸ்மிருதி மிருதியை விலக்குமா?

ஆம், ஸ்மிருதி மிருதியை விலக்கிவிடும். அடியிற்கண்டபடி இவ்வுண்மையைத் துவக்கி அறிந்து அனுஷ்டிக்கும்படி பெரியோர்கள் எடுத்துரைக்கிறார்கள்.

ஊகத்திற்கும் எட்டாது நிற்கும் பழமையடைந்த இப் பரதகண்டத்தில் தொன்றுதொட்டு கொண்டாடப்பட்டுவரும் வேதங்களின் மகிமை வெளிப்படும் உபநிஷத்துக்களில் கடோபநிஷத்து, நாஜன்மம், கடைத்தேற வழிப்படுத்துவதில் உத்தமமான ஒன்றே ஐயமில்லை.

ஷை உபநிஷத்தினின்றும் வெளிப்படும் விஷயமாவது:—வாஜசிரவஸர் என்ற ஒரு ரிஷி விசுவஜித்து என்ற ஓர் யாகத்தை செய்து முடித்தார். ஷையாருக்கு நசிகேதஸ் என்ற ஓர் உத்தமமான பிரம்மச்சாரி புத்திரனாகப் பிறந்திருந்தான். தகப்பனார் நடத்தும் யாகத்தை மகன் சிரத்தையுடன் கவனித்துவந்தான். விசுவஜித்து என்ற யாகம் சாதாரணமானதன்று, ஓர் அபூர்வமான சிரமம்கொண்ட யாகம். ஷையாகத்தில் தன்னிடமுள்ள யாவையும் தக்ஷிணையாகக்கொடுத்துவிடவேண்டும். ஆனால்தான் யாகம் பூர்த்தியாம். உத்தமோத்தமமான லோகாந்திரத்தை அடையலாம்.

ஷை யாகத்தை மிக்க சிரத்தையுடன் கவனித்திருந்த நசிகேதஸ், தன் பிதா தக்ஷிண ரூபமாகச்செய்த பசு தானங்களில் திருப்தியடையாமல் தகப்பனாரை நோக்கி 'என்னை யாருக்குக் கொடுக்கப்போகிறீர்' என்று இரண்டு மூன்றுவது தடவையும் அழுத்தமாய்க்கேட்டான். காரணம் தக்ஷிணையாகக் கொடுக்கப்பட்ட பசுக்கள் ஜலம் குடிக்கமுடியாமல் நெஞ்சுலர்ந்தும், புல்லைக் கடிக்கமுடியாமல் பற்கள்போயும், பால்கறக்க யோக்கியமல்லாத ஈத்துமாறினவைகளாயுமிருந்தன. மகன் கருத்தை அறியமுடியாத தந்தை உன்னை இயமனுக்குக் கொடுக்கிறேன் எனக்கோபமேலீட்டால் சபித்தார்.

நசிகேதஸ் பிதாவின் சாபத்திற்குப் பயந்தவனாகத் தெரியவில்லை. இயமனுக்குத் தன்னால் ஆகவேண்டிய காரிய

மென்னவென்றும் இயமனுக்கு முன்செல்லத் தான் தயார் என அர்த்தப்படும்படியாகவும் தந்தைக்கு மறுமொழியுரைத்தான். முன்னோர்களும், பின்னோர்களும், போனவழியும், போகும் வழியுந்தான் உனக்குமுண்டு. மண்ணுலகிற்பிறந்தவன் புற்பூண்டு களைப்போல் அழிந்து திரும்ப (முளைக்க) உண்டாகக் கடவன் என்று சொல்லி முடித்தான்,

ஷி சம்பாஷணைக்குப் பின்னர், பிதாவும் புத்திரனும், ஸந்தித்ததாகத் தெரியவில்லை. புத்திரன் நசிகேதஸ் எவ்விதம் இயமபுரம் போனான். காலதூதர்கள் வந்து கட்டிச்சென்றதாகத் தெரியவில்லை. பிரும்மச்சாரி சரீரத்தோடே, இயமனுடைய கிரகத்திற்கு அதிதி என்ற நிலையிற்றெனப்படுகிறான். பிராம்மண அதிதி வைசுவாநரதேவதையாகப் பிரகாசிக்கிறார். வைசுவாநர தேவதையோ, க்ஷுத்(பசி) ரூபமாக அக்கினிபகவானைத்தவிர வேறல்ல. நசிகேதஸை யாம்ய பதத்தில் இயமனைத்தவிர வேறு ஒருவரும் ஸந்தித்ததாகவும் துலங்கவில்லை. இயமனும் மூன்று இராத்திரிக்குப் பின்னர்தான் நசிகேதஸ் என்ற ப்ராம்மண பிர்ம சாரியை வெளிவந்து. "ஹே ப்ரம்மன் தங்களுக்கு நமஸ்காரம். எனக்கு க்ஷேமம் உண்டாகட்டும். எனக்கோருகிறான். இயமனை நசிகேதஸிடம் தாங்கள் என் க்ரஹத்தில் ஆகாரமில்லாமல் மூன்று இராத்திரிகள் தங்கிவிட்டீர்கள், ஆகையால் மூன்று வரங்கள் என்னிடம் கேட்டுவாங்கிக்கொள்வீர்களாக என்றான்.

நசிகேதஸ்இயமனுடைய கிரகஞ்சேர்ந்ததும் वैवस्वत उदक् हर எனக்கேட்டதாகப் புலப்படுகிறது. அந்த இடத்தில் ஓ! இயமனை ஜலங்கொண்டுவா? என்று ஏவல் வினையில் கருத்தை வெளியிட நசிகேதஸ் தவிர வேறு யாருக்கு வசம். ஏனென்றால் இயமன் ஒருஸாதாரண அதிகாரியல்ல. இயமனை ஸந்தித்தபிறகு நசிகேதஸ் ஜலத்தையோ, ஆகாரத்தையோ, அல்லது வேறு எதையோ அவனிடம் கேட்டதுண்டோ? இல்லை. ஊன்றி விசாரிக்க இறங்கினால் நசிகேதஸ் ஸாதாரண மானிடஜன்மம் அடைந்தவர் அல்ல. ஸாக்ஷாத் வஸ்துவே பிராம்மண பிரம்மச் சாரியாக அவதாரஞ்செய்துபிரத்தியக்ஷமாய் நரர்களுக்கு மிருத்யு பய நிவர்த்தகத்தைக் காட்டி மறைந்தவர்போல் தென்படுகிறார் ஷியாருக்கும் அவர் பிதாவுக்கும் நடந்த ஸம்வாதத்தைக் கவு

னிக்கும்பொழுது ஸ்ரீமத்பகவத்கீதையில் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா அர்ஜுனனிடத்தில்

अवजानन्ति मां मूढा: मानुषीन्तनुमाश्रितम् ।
परं भावमजानन्तो मम भूतमहेश्वरम् ॥ கீ அ 9

தன்னை உள்ளபடி பரமாத்மா என்று தெரிந்துகொள்ளாமல் கேவலம் மனிதன் என்று மூடர்கள் எண்ணுகிறார்களென்றதுபோல நசிகேதஸையும் மற்றகிரகங்களில் இருக்கும் பிரம்மசாரிகளைப்போல ஒருவராகக் கருதி பிதா தன் புத்திரன் மகிமையை அறிந்துகொள்ள முடியாமல் நடந்துவிட்டார்.

நசிகேதஸ் இயமனிடம் முதலாவது கேட்டவரம் 'விசுவஜித்து' என்ற யாகத்தைச்செய்து முடித்த தம் பிதாவின் க்ஷேமார்த்தமான காரியமே. கோபமிருக்கும் வரை மனிதன் இயமலோகத்தையே அடைவான். கோபமே பாபம். கோபமே நரகத்தினுள் புகுத்திவிடும். ஆகலால் நசிகேதஸ் யாம்யபதத்தில் தர்மராஜாவினால் கொண்டாடப்படவும், பிதா மிருதியடைந்து அதேபதத்தில் தண்டனைபடுதலும் ஒவ்வாத காரியமெனக்கருதி இயமனிடமே தம் பிதாவினிடமிருக்கும் கோபமுதலான தோஷங்களை நிவர்த்திசெய்து வைக்கும்படிக்கும் தம்பெருமையை அவர்தெரிந்து கொள்ளும்படிக்கும் செய்யவேண்டுமென்கிறார். இயமனும் அப்படியே நசிகேதஸின் பிதாவான வாஜசிரவஸரிடமிருந்த தோஷங்களைப் பூராவாய் விலக்கி அவருக்கு நன்றாய் அனுக்ரஹம்செய்துவிட்டான். நசிகேதஸுக்கு தம்பிதா விஷயமாய் உண்டான சிரத்தை பூர்ணபலத்தை அடைந்து விட்டது. புத்திரனின் மகிமையைத் தான் தெரிந்துகொண்டார் என்ற விபரம் இயமன் வாய்வழி வெளிப்பட்டது.

இரண்டாவது வரத்தில் நசிகேதஸ் இயமதர்மனிடம் ஸுவர்கத்தில்பயம்இல்லை. நீர் இல்லை. பசிதாகத்தைத்தாண்டிசோகாதிகளுக்குவிலகி, ஸுவர்க்கவாஸிகள்ஸந்துஷ்டர்களாயிருக்கிறார்களே என்றார். எந்த அக்கினியை உபாஸித்து ஸுவர்க்க ஸ்தானத்தை அடைந்து அமிருதத்துவம் (இறப்பின்மை) பெற்றிருக்கிறார்களோ அந்த அக்கினி உபாஸ்தியை சிரத்தையுடன் இருக்கும் எனக்குச்சொல் இதுவே இரண்டாவது வரமென்றார்.

இந்த வாக்கினின்றும் நசிகேதஸ் தனக்குத் தெரியாததை இயமனிடமிருந்து கற்றுக்கொண்டதுபோலத் தோன்றவில்லையே. ஸ்வர்கத்தைப் பற்றித்தான் நன்றாய்த் தெரிந்தவரென்று அர்த்தமாகும்படியாய் இயமனிடம் பேசுகிறார். அக்கினி சயனத்தை இயமன் அவரிடம் பூர்ணமாய் வர்ணித்தபின், அவரும் விடாமல் அதையே ஒப்பிக்க அவனும் சந்தோஷப்படுகிறான். அந்த அக்கினி சயனமும் அவருடைய நாமாவாலே பிரஸித்தமாயிருக்கிறதென்பதைச் சொல்லிக்கொண்டாடுகிறான். மூன்று தடவைகள் நாசிகேதாக்கினியைச் சயனஞ்செய்து யாகபூர்த்தி செய்தவர்களுக்கு ஜனனமரண பயதுக்கமில்லை. என்று அவனே அவரிடம் சொல்லுகிறான்: இயமன் அவரை அனேக இரத்தின விசேஷங்களால் செய்யப்பட்ட ஓர் மாலையை கிரகித்துக்கொள்ளும்படி வேண்டிக்கொள்கிறான்,

உண்மையைத் தெரிந்துகொள்ள விரும்புகிறவர்களுக்கு இதினின்றும் வெளியாவதென்ன நசிகேதஸ் இயமனிடமிருந்து புதிதாய் என்ன கற்றுக்கொண்டார்? நசிகேதஸ்விடம் என்ன குறைவு இருந்தது, அதை இயமன் விலக்கினான். நசிகேதஸ்ஸுக்கு யம பயமிருந்ததாகத் தெரிகிறதா? நன்றாய் கவனிக்கும்பொழுது நசிகேதஸ் இயமனைப் பரீக்ஷித்தாரா? அல்லது இயமன் நசிகேதஸை அவ்விதம் செய்தானென்பதே கவனிக்கத்தக்கது. ஸ்ரீமத் பகவத் கீதையில் ஸாக்ஷாத் பரமாத்மா விபூதி யோகத்தில்

वसूनां पावकश्चास्मि ………… तेजस्तेजास्विनामहम् ॥

என்று தெளிவாய் உபதேசித்திருக்கிறார். ஸ்ரீ புருஷோத்தமன் பூவுலகில் யோகிகள் கர்மயோகத்தை ஸ்ரேஷ்டமாய் நடத்தி மரண பயத்தை நிவர்த்தித்துக்கொள்கிறார்களில்லையென அறிந்து தாமே மானிடவடிவாய்,பிராம்மண பிரம்மச்சாரியாய் அவதாரஞ்செய்து பிரம்மசரியம் குறையாதவராய் மானிடப்பிறவிக்குள்ள பசி, தாகம், நித்திரை முதலான தோஷங்களை ஜயித்தவராய் சரீரத்தோடே யாம்ய பதஞ்சென்று தம் பிதாவிடமிருந்த மிருத்யுபயங் காமான தோஷங்களை மிருத்யுவைக்கொண்டே நிவர்த்திக்கும்படிசெய்து தம்மை ஸமஸ்தயோகிகளும் உலகும் அறியவேண்டுமெனக்கருதி இயமனைத்தூண்டி தம் நாமாவால் பிரஸித்தி

பெற்று அனுஷ்டிக்கப்பட்டுவரும் நாசிகேதாக்னி சயனத்தை வெளிப்படுத்திப் பின்னர் மிருத்யு பய நிவர்த்தக மார்க்கத்தையும் அவன் வாக்கினால் வெளிப்படும்படி செய்கிறார். அடியில் கண்ட சுலோகம் இங்கு கவனிக்கத்தக்கது.

अनभ्यासेन वेदानां आचारस्यच वर्जनात् ।

आलस्यात् अन्नदोषाच्च मृत्युः विप्रान् जिघांसति ॥

“வேதாப்பியாஸமில்லாமையாலும், ஆசாரத்தை விட்டதாலும், சோம்பலாலும், அன்னதோஷத்தாலும், மிருத்யு பிராம்மணர்களையும் கொல்லப் பார்க்கிறான்” என்றதால் இவைகளைக் கவனித்து புத்திமான் விலக்கவேண்டியது. யம பயமில்லை.

மூன்றாவது வரத்தில் நசிகேதஸ் இயமனிடத்தில் அவன் உத்யோகத்தின் இரகஸியத்தை வெளிப்படுத்தும்படியான கேள்வியைக் கேட்கிறார், இயமன் தன் இரகஸியத்தை வெளிவிடாமல் கூடியவரை நசிகேதஸைச் சோதிக்கிறான், முடிவில் ஒன்றும் அவரிடம் நடக்கவில்லை. எவ்வாறெனின் மனிதன் பிரேதமானபொழுது சிலர்கள் இருக்கிறது. மற்றும் சிலர்கள் இல்லை. என்ற ஸந்தேகத்தை உண்டுபண்ணுகிறார்களே இது உன்னால் சொல்லப்படவேண்டும். இதுவே மூன்றாவது வரம் என்றார். இயமன் தேவதைகளுக்குக் கூட இதுவிஷயத்தில் ஸந்தேகந்தான். தெரிந்துகொள்ளமுடியாதபடி ரொம்பவும் நுட்பமான விஷயம். இதைவிட்டுவிட்டு வேறுவரம் கேட்கவேண்டுமென்றான். தேவதைகளுக்கு ஸந்தேகமுண்டாவது ஸகஜம் இது விஷயத்தை உன்னைப்போல் மற்றவர் வெளியிடமுடியாது, இதற்குத் துல்லியமான வேறு வரமுமில்லை என்றார். இயமன் திரும்பவும் மனுஷ்ய ஜன்மாவை அடைந்தவர்கள் ஆசைகொள்ளக்கூடியவைகளை அடுக்கிட்டு அவையனைத்தையும் வரங்கேட்கும்படிசொல்ல ஜிதேந்திரியனான நசிகேதஸ் நீ கணக்கிட்ட போகங்கள் நாளைவரை இருப்பனவென்பது உறுதியோ? மனிதனுடைய இந்திரியங்களுக்கு போகங்கள் ஜரையை உண்டுபண்ணக்கூடியவைகள் உன் குதிரைகள், ஆடல்கள், பாடல்கள் உனக்கேயிருக்கட்டும். மனிதன் பணத்தால் திருப்தியடையமாட்டான்- உன்னை ஸாக்ஷாத்கரித்தானாகில் நீ உள்ளவரை உன்னிடமுள்ளதையெல்லாம் அவன் அனுபவிக்கலாம் அவிநாசி

யான வஸ்துவை ஸாக்ஷாத்கரித்தவன் நாசஹேதுகாமான ரதி முதலானதுகளில் ரமிக்கமாட்டான். யாதொரு மகத்தான ஸாம்பராயத்தில் அறியமுடியாமல் சந்தேகப்பட்டிருக்கிறார்களோ அந்த இரகஸியமான இடத்தையே வெளியிடவேண்டும். நசிகேதஸ் வேறொரு வார்த்தையும் அபேக்ஷிக்கவில்லை என்றார். இயமன் நசிகேதசின் உறுதியை அசைக்கமுடியாதவனாய் உண்மையாக வெளியிடுகிறான். உபரியும் நசிகேதசின் பெருமையைக் கொண்டாடிப்பேசிமுடிவில் सद्मविवृतम् என அவரைப்புகழ்ந்தான் அதற்குஎமாற்றப்படாதவராய் यत्तत् पश्यसितद्वद என்றார் உடன்இயமனும் संग्रहेण ब्रवीमि என்றுओमित्येतत् எனமுடித்தான்.

ஓம் என்ற பிரணவவார்த்தை விசாரிக்கப் புகுந்தால் ரொம்பவும் வியாஸம் பெருகிவிடும். ஆதலால் இங்கு விடுக்கப்பட்டது. எதைப் பார்க்கிறாயோ அதைச்சொல் என்றநசிகேதஸுக்கு அது 'ஓம்' என்ற பிரணவ ஸ்வரூபியாய் ப்ரம்மசாரியாய் அவதாரஞ்செய்து முன்னே இதோ இருக்கிற நீர்தான்என்று மொழிந்தான்

नाचिकेतमुपाख्यानं मृत्युप्रोक्तं सनातनम् ।

நசிகேதசின் அவதார மகிமை இயமனாலே வெளிப்பட்டது. அதையும் ஸநாதனமென்று வேதம் கொண்டாடுகிறது. ஆகவே நசிகேதஸுக்கு மிருதி (மரணம்) இல்லை; விலக்கப்பட்டது.

நசிகேதசின் ஸ்மிருதி (அவதாரணம்)தான் மிருதியை விலகிற்றோவென்றால் அதுவேதான் விலக்கிற்றென்னலாம். நசிகேதஸின் சித்தவிருத்தி, சித்தசுத்தி, சித்தஸித்தி, சித்த ஸம்யமத்தைச் சோதிக்கவேண்டும்' (சித்தஸம்யம அபூர்வபலத்தை சாண்டில்யோபநிஷத்தினின்றும் அறியலாம்)

ஷ ஸம்வாதத்தில் (நசிதேவஸ் மிருத்யு) நசிகேதஸ்ஸுக்கு ஸுவர்க்கலோகம் மர்த்திய (பூமி) லோகம் இயமலோகம் ஆகிய மூவுலகங்களையும் பற்றிய ஸூக்ஷ்மமான திருடஞானம் உண்டென வெளிப்பட்டுவிட்டது. நசகேதஸ் மண்ணிற் பிறந்தும் மண்ணை (ஸஸ்யத்தை)த்தின்னவில்லை. மனிதவடிவெடுத்தும் பெண்ணை மணக்கவில்லை, குழந்தைப்பருவத்திலிருந்தும் பொன்னைத்தொடவில்லை,

அடியிற்கண்ட ஸ்ரீமத் பகவத்கீதாசுலோகம் இங்கு கவனிக்கத்தக்கது.

विषया वि – निवर्तन्ते निराहारस्य देहिनः ।
रसवर्जं रसोप्यस्य परं दृष्ट्वा निवर्तते ॥ 59–2.

நசிகேதஸின் சித்தஸம்யமம்

नासाग्रे चित्तसंयमादिंद्रलोकज्ञानम् ।
श्रोत्रे चित्तसम्यमाद्यमलोकज्ञानम् ॥
नाभौ चित्तसम्यमांभूलोकज्ञानम् ।
कण्टकूपे क्षुत्पिपासानिवृत्तिः ।
कायाकाशसम्यमादाकाश गमनम् ।
तत्तत्स्थाने सम्यमात्तत्तत्सिद्धयो बवन्ति ।

शाण्डिल्योपनिषत् ।

மேலும் நசிகேதராய்

चित्तमूलंहि संसारं तत्प्रयत्नेन शोधयेत् ।

என்பதிலுள்ள உண்மை விளக்கினவர் ஆகையால் சித்தசுத்தியடைந்து ஸாம்ஸாரிகத்தை(ஜாகரிதம், ஸ்வப்நம், ஸுஷுப்தி) வேருடன் களைந்து ஸம்யமத்தை அனுஷ்டித்து மரணத்தை விலக்கி, ஜீவன் முக்தனாய் கிரமமாய் மோக்ஷமடைவதே மானிடப் பிறவிக்குரியதென நேரில்நாமளுக்குக்காட்ட அவதரித்தார் என்றால் பொருந்தாதா?

தர்ம கர்மங்களில் விசுவாஸங்கொண்ட மனுஷ்ய வர்க்கத்தார் எல்லாம் பூர்வபுண்ணியம், குருகடாக்ஷம் இவ்விரண்டின் ஸஹாயங்களால் ஸாக்ஷாத் பரமாத்மாவை ஏகமனதுடன் உபாஸித்து உய்வதே நலம்பொருந்தியபெரும்பேறு.

P. N. இராமபதரய்யர்.

ஈசாவாஸ்யத்வைத பாஷ்ய விசாரம்.

(278-வது பக்கத்தொடர்ச்சி)

4-வது மந்திரத்தில் **पूर्व अर्षत्** என்ற வசன பாகத்திற்கு

" स्वयंतु सर्वानगमत्पूर्वमेवस्वभावत: "

'பகவான் முந்தியே எல்லாவஸ்துக்களையும்'' அடைந்தாரென்று அர்த்தங்கூறி பிறகு **ऋषज्ञाने** என்ற தாதுவிலிருந்து **अर्षत्** என்ற பதம் ஏற்பட்டதாகவர்ணிக்கப்படுகின்றது. **अर्षत्** என்றபதத்தினுடைய வியாக்கியானம் **अगमत्** என்று இந்த **अगमत्** என்ற பதத்திற்குஅறிந்தார் என்று அர்த்தங்கூறுவதும் இவ்விடத்திலவசியம் இல்லை. அடைந்தார் என்ற அர்த்தத்தில் ஏதாவது பிரகிருத விரோதமுண்டா? **ऋषज्ञाने** என்ற தாதுவே பாணிநியால் படிக்கப்படவில்லை, இது அபூர்வமாகத்தான் இருக்கிறது. இப்படி அபூர்வ தாதுவை எழுதுவது அழகாகுமா' **ऋषगतौरिशहिंसायां** என்றுதானே தாதுபாடத்திலுள்ளது. தமது விவரணத்துக்கே விரோதமாயுள்ள தாதுவை எதற்காக எடுத்துக்காட்டவேண்டும்.

தவிர இம் மந்திரத்தின் (4)வது பாதத்திற்கு "வாயு" தனது சேஷ்டைகளை ஸ்ரீமந் நாராயணனிடம் ஸமர்ப்பித்தார் என்று த்வைத பாஷ்யம், இது த்வைதமதத்திற்கே விருத்தமானது. வாயுவையும் வாயு சேஷ்டைகளையும் ஸ்ரீமந் நாராயணனே ஸிருஷ்டித்தாரென்பது மாத்துவமத ஸித்தமில்லையா. ஸர்வாந்தர்யாமியாயும் ஸர்வகாரணருமாகிய ஆதிபுருஷன்வாயுவினிடம்சேஷ்டைகளைக் கடன் வாங்குவாரா? அப்படிக் கடன் வாங்குவதுதான் அவருக்கு ஒரு கௌரவமாகுமா?

(5)வது மந்திரத்தில் **तदेजति** என்ற பதத்திற்கு **ततएव राजत्यन्यत्** என்று த்வைதிகளின் வியாக்கியானமும் விபரீதமேயாகும் **तत्** என்பதற்கு "அது" என்ற அர்த்தம்கிடைக்குமேயன்றி அதிலிருந்து என்ற அர்த்தம் எப்படி கிடைக்கும். தம்முடைய அனுசித வியாக்கியானத்திற்கு அனுகுணமாகவும் **अन्यत्** என்ற பதத்தை எதற்காகச் சேர்த்துக்கொள்ளவேண்டும். இருக்கிற பதத்திற்கு அர்த்தங் கூறமுடியவில்லையா, 8-வது மந்திரத்தில் **अकाय अस्नाविरं** என்றபதங்களால் பகவானுக்குஸ்தூல ஸூக்ஷ்ம

சரீரமில்லை என்று சொல்லப்பட்டிருப்பதாக மாத்வ பாஷ்யம் மாத்வமதத்தில் பகவானுக்குச் சரீரமில்லை என்பதுதான் இல்லை. अरूपवदेवहितत्प्रधानत्वात् என்ற பிரும்மஸூத்திரத்தில் பகவான் தம் சக்திமஹிமையால் ராமகிருஷ்ணுதி சரீரவடிவமாயும் சரீரியாயும், விளங்கி விளையாடுகிறுர் என்றல்லவா? த்வைதிகளின் தீர்மானம். ஆகவே பகவானுக்குப் பௌதிகாபௌதிக சரீரம் இரண்டுண்டென்று மற்ற விடங்களில் சொல்லிவிட்டு இவ்விடத்தில் மட்டும் பகவானுக்குச் சரீரமில்லையென்றுல் விருத்தமாமன்றே?

அவ்விதமே, 9,10, 11, 12,13-வதுமந்திர பாஷ்யமும் மஹாவிருத்தமேயாகும். அதாவது

பகவானை யதார்த்தமாகத்தான் உபாஸிக்கவேண்டும் யதார்த்தமாகப் பகவானை உபாஸிக்காதவர்களையும் நிந்திக்கவேண்டுமாம். இவ்விரண்டையும் எவன்செய்கிறுனே? அவனுக்குத்தான் மோக்ஷம் கிடைக்குமாம், அப்படியே பகவானுடைய ஸிருஷ்டிகிரியை ஸம்ஹாரக்கிரியைஇவை இரண்டையுங்கூட உபாஸிக்கவேண்டுமாம். இது இம் மந்திரார்த்தமாம்.

இவ்விதமர்த்தங் கூறுவதெல்லாம் அஸங்கதந்தான். அப்படியே 14, 15, 16, 17, 18-வது மந்திரங்களிலும் மாத்வ பாஷ்யம் ஸமஞ்ஜஸமில்லை.

ஸ்பஷ்டமாக ஜீவேச்வரா பேதத்தையறிவிகக்கும் 'सोहमस्मि। என்றவாக்கியத்திற்குப் பேதபரமான அர்த்தங்கூறஆனந்ததீர்த்தாசார்யாள் வெகு சிரமப்படுகிறுர். இது ஸரியல்ல. அப்படியே अग्नि சப்தத்திற்கு अग्निरङ्गप्रणेतृत: வ்யுத்பத்திசொல்லி ஹரி என்று அர்த்தம் சொல்லுவது ஒருபோதும் தகாது. ஆதலால் ஒரு மந்திரத்துக்காவது ஸரியானபடி இவருடைய அர்த்த விவரணமில்லை என்பது ஸித்தம். ஆகவே த்வைதாந்தகாரத்தில் அகப்பட்டுக்கொண்டு கஷ்டப்படாமல் அத்வைத சந்திரிகையில் ஆனந்தமாக விளையாடும்படி ஸாதுக்களை நான் வேண்டிக்கொள்கிறேன்.

இரண்டாவது பாகம் முற்றிற்று.

அத்வைதாபிமானி.

आर्यधर्माभिनन्दनम् ॥

उदन्तानां धामा सुबहुमहतां व्यासनिकरः
सतां धाम्नो वर्त्मा सकलभुवनानां प्रियमणिः ।
सतां धर्मो भूतः सहृदयहृदाह्लादचतुरः
सखाय : कोपीत्थं चरति सदयेनाद्रियत तम् ॥ ॥१॥

அரிய பெரிய விருத்தாந்தங்களுக்கு இருப்பிடமாயும், அநேக வியாஸங்களை வெளியிடுவதாயும், ஸாதுக்களின் ஸ்தானத்திற்கு வழியாயும், ஸகல உலகத்தாருக்கும் பிரியமானதாயும், ஸாதுக்களின் தர்மத்தை வெளிவிடுவதால் எல்லோருக்கும் மகிழ்ச்சியைத் தருவதாயும், ஆகிய ஆர்யதர்மம் தார்மிகரெல்லோருக்கும் தோழனாக உலாவிவருகிறது. தயவுசெய்து அதனை ஆதரியுங்கள்.

सोयं श्रुतिस्मृतिपुराणमहत्सुशालं
लोकस्य वृत्तमपि सज्जनताश्च एव ।
साधूपदिश्य भगवच्चरणप्रसादात्
साप्ताहिकःक्रमति देशमिहार्यधर्मः ॥ ॥२॥

சுருதி ஸ்மிருதி புராணாதிகளில் இரஹஸ்யத்தையும், நல்ல சீலமுள்ள மஹான்களையும், புகழ்ந்து வருவதும், ஸஜ்ஜனங்களின் வழியாக உலக விருத்தாந்தங்களை வெளியிடுவதும் ஸ்ரீஜகத்குரு ஸ்ரீகாமகோடி பீடாதிபதிகளின் அனுக்ரஹத்தை முன்னிட்டு குருவாரந்தோறும் பிரசுரிக்கப்படுவதுமான ஆர்யதர்ம பத்திரிகை ஓடோடி வருக.

A. R. மலையப்பன்.

மனுஸ்மிருதி அத்தியாயம். 2

சில வசனங்கள்.

1. வேதம் ஓதுவரிடமிருந்து அவருடைய அனுமதியன்னியில் வேதத்தைத் தெரிந்துகொள்ளுகிறவனுக்கு வேதத் திருட்டு தோஷம் ஏற்பட்டு நரகபாதை உண்டாகும். ஆகையால் அப்படிச் செய்யக்கூடாது.

2. அர்த்த சாஸ்திரம், வேதம், பிரம்மஞானம் இவைகளை அடைய விருப்பமுள்ளவன் குருவை முதலில் நமஸ்கரிக்க வேண்டும்.

3. மூன்றுவேதமும் தெரிந்து இந்திரிய நியமமில்லாமல் கண்ட ஆகாரத்தை புஜிக்கிறவனும், விற்கக்கூடாத பதார்த்தங்களை விற்கிறவனுமிருக்கிறவனைக்காட்டிலும் காயத்ரீமாத்திரம் தெரிந்து இந்திரியமுதலியன நியமத்தோடு இருக்கிறவன் மேலானவன்.

4. குரு உபயோகிக்கும் படுக்கையோ, ஆஸநமோ, அதை சிஷ்யன் உபயோகிக்கக்கூடாது. தான் படுக்கையிலிருந்தாலும் ஆஸநத்திலிருந்தாலும், குருவை எதிர்கொண்டு நமஸ்கரிக்க வேண்டும்.

5. பெரியவர் வரும்பொழுது சிறுவனின்பிராணன்வெளிக்கிளம்புகிறது. பெரியவரைக்கண்டு எதிர்கொண்டு நமஸ்கரிப்பதால் அச் சிறுவன் வெளிக்கிளம்பும் பிராணனைத் திரும்ப அடைந்து வெகுகாலம் ஜீவித்திருப்பான்.

6. எழுந்திருந்து எப்பொழுதும் பெரியவர்களை நமஸ்கரிக்கிறவனுக்கு ஆயுஸ், வித்யா, கீர்த்தி, பலம் இன்னான்கும் விருத்தி ஆகும்.

7. பெரியவர்களை நமஸ்கரித்துத்தான் இன்ன பெயரை உடையவன் என்று தன் பெயரைச்சொல்லவேண்டும்.

8. ஸம்ஸ்கிருத ஞானமில்லாததால் அபிவாதன அர்த்தம் தெரியாதவர்களுக்குத் தெரிந்தவர்கள் நமஸ்கரிக்கும்போது நான் தான்'' என்று சொல்லவேண்டும், அப்படியே ஸ்ரீகளுக்கும் சொல்லவேண்டும்

9, நமஸ்கரிக்கும்போது தன் பெயருக்குப் பிறகு "போ'' என்னும் சப்தத்தை உச்சரிக்கவேண்டும். ஏனென்றால் இச் சப்தமும் பெயரும் ஒரேஸ்வரூபமுள்ளவைகள் என்று இருஷிகள் சொல்லியிருக்கிறார்கள்.

10. பிராமணன் நமஸ்கரிக்கும்போது "அப்பா'' தீர்க்காயுளுடையவனாயிரு என்று (ஆயுஸ்மான்பவஸௌம்ய) ஆசீர்வதிக்கப்படவேண்டும்.

R. ஸ்வாமிநாதய்யர்.

சிறுவருக்கான சிறுகதைக் கொத்து.

த்ருபதன்.

1. பாஞ்சால நாட்டை ஆளுபவனுக்குப் பொதுப்பெயர் பாஞ்சாலன், ஒரு பாஞ்சாலன் தனக்கு குழந்தை இல்லாததால் வனஞ்சென்றான். பலநாள் தவம்புரிந்தான். ஓர் புஷ்பமாத் தருகே நின்றான். அங்கு தற்செயலாக மேனகை வந்தாள் அவளைக்கண்டு அரசன் வீர்யம் கீழேவிழுந்தது. அங்கிருந்து ஓர் குழந்தை பிறந்தது. மாத்தின்கீழ் காலால் மெதிபட்டு பிறந்ததால் த்ருபதன் என அதற்கு பெயர் வந்தது.

2 அவன் அரசனாகி ராஜ்யத்தை ஆண்டுவந்தான். அவரது தோழரான துரோணர் அவரிடம் வந்தார். நான் உன் தோழனல்லவா? என்றார். த்ருபதன் ராஜா. இவர் ரிஷி. பணகர்வத்தால் எனக்கு நீயா தோழன்? போ! போ! ஏழைக்கு பணக்காரன் நண்பனா? பேடிக்கு வீரன் ஸ்நேகிதனா? வைதிகருக்கு நாஸ்திகன் நண்பனா? என்றான். த்ரோணர் இவன் கர்வத்தையடக்க வேண்டும் என்று பாண்டவர்களையும் கௌரவர்களையும் சிஷ்யனாக்கினார்.

3. கர்வங்கொண்ட பாஞ்சாலனைக் கட்டிவரும்படி துரோணர் கௌரவர்களைக் கூறினார். அதே தனக்கு தக்ஷிணை என்றார். அவர்கள்போய் பாஞ்சாலனிடம் அடிபட்டு வந்தனர், பிறகு பாண்டவர்களை அனுப்பினார். அர்ஜுனன் நல்ல பராக்ரமம் உள்ளவன். அதோடு அவனுக்கு குருபக்தி அதிகம். ஆகையால் அவன் சண்டையில் ஜயித்தான். குரு சொற்படி த்ருபதனைத் தேர்க்காலில் கட்டிவந்தான் சிறுவயதில் பெரியஜயத்தை அடைந்தான்,

4. எல்லோரும் அதைக்கண்டு ஆச்சர்யமடைந்தனர். பாண்டவரே தக்ஷிணையளித்தார்கள். த்ரோணர் துருபதனுடைய பாதி ராஜ்யத்தைப் பிடிங்கிக்கொண்டு அவனைக் கொல்லாமல் விட்டார், த்ருபதன் தோற்றாலும் சிறு குழந்தையான அர்ஜுனனைக்கண்டு ஸந்தோஷமடைந்தார். அவனுக்குக்கொடுக்க ஓர் பெண்ணில்லையே என்று வருந்தினார். த்ரோணரைக்கொல்ல ஒரு பிள்ளை பிறக்காதா? என்று கஷ்டப்பட்டார்.

5. நாட்டைவிட்டு காட்டிற்குப்போனார். வேதாத்யயனம் செய்யும் யாஜ உபயாஜர்களைக் கண்டார். அவ்விருவரும் அண்

ணன் தம்பி. மஹாதபஸ்விகள் காச்யப கோத்ரத்தில் பிறந்த வர். ப்ருஷதர் என்பவரது குமாரர்கள். த்ருபதன் உபயாஜரிடம் சென்றான். த்ரோணரைக் கொல்லும் பிள்ளை பிறக்க ஓர் யாகம் செய்து வையுங்கள் எதேஷ்டமாக தனம் தருகிறேனென்றான். அவர் காசுக்கு ஆசைப்பட்டவரில்லை.

6. என்னால் முடியாது என்று சொல்லிவிட்டார். அவனும் அவரைவிடாமல ஒருவருஷம் பூஜித்தான். அவர் என் ஸகோதரனை யாஜனிடம் போ செய்து வைப்பான என்றார். அப்படியே அவனும் அரசனுக்கு யாகம் செய்துவைத்தார், த்ருபதன் மனைவியான ப்ருஷதீ அல்லது கௌஸலீ என்பவளை யாஜர் அழைத்தார். அவள் கர்வத்தினால் சீக்ரமாக அங்கு வரவில்லை. இரும்! அவஸரமென்ன? நானின்னும் அலங்காரம் செய்து கொள்ளவில்லை என்றாள்.

7. பெரியார் கூப்பிட்டவுடனே போகவேண்டுமல்லவா? தாமதிக்கலாமா? யாஜர் பார்த்தார். அவருக்கு கோபம்வந்தது. நீவந்தால் வா? வராவிட்டால் போ? யாஜம் அவியைச்செய்தவன், உபயாஜன் அதை மந்திரித்தவன்! குழந்தை எப்படி பிறக்காமல் போகும்! பார்ப்போம்! என்றார். அந்த ஹவிசை அக்நியில் ஹோமம் செய்துவிட்டார்.

8. உடனே அக்னியிலிருந்து ஓர் அழகான புருஷன் பிறந்தான். அவன் உடலில் கவசமிருந்தது. கையில் கத்திவைத்திருந்தான். தலையில் க்ரீடமிருந்தது, அதனைக்கண்டு எல்லோரும் ஆச்சர்யப்பட்டனர். அக்குழந்தை ரதத்தின்மீது ஏறிற்று. பிறகு ஆகாசத்திலிருந்து ஓர் அசரீரியானவாக்கு கிளம்பியது, இவன் த்ரோணருக்கு சிஷ்யன். சத்ருவுமாவான்.

9. இவனால் பாஞ்சாலன் துக்கம் ஒழியும் என்றது. இதைக் கேட்டு பாஞ்சாலன் பரம ஸந்தோஷமடைந்தான். அவ்வூரிலுள்ளார் அதை ஓர் உத்ஸவமாகக் கொண்டாடினார்கள். தைர்யசாலியாக ஸ்வர்ணத்துடனும்பிறந்ததால் இவனுக்கு த்ருஷ்டத்யும்நன் என்று பெயர்வைத்தார்கள். கார்ஹபத்யம் ஆஹவனீயம் தக்ஷிணாக்நி என்பவையாகத்தால் பூஜிக்கப்படும் அக்னிகள்.

10. இம்மூன்றிற்கும் நடுவிலுள்ள பூமி வேதி எனப்படும். அந்த வேதியிலிருந்து ஓர் அழகிய கன்யகை பிறந்தாள். அவள்

மிக்க அழகுள்ளவள். லக்ஷ்மீ தேவிதான் இப்பெண்ணுருவமாக வந்தாளோ! என்று எல்லோரும்நினைத்தார்கள். அவள் கறுப்பு நிறமாக இருந்ததால் க்ருஷ்ணை என்றுபெயர் வைத்தார்கள். இரு குழந்தைகளையும் கண்டுத்ருபதன்ஸந்தோஷமடைந்தான்.

11. த்ருபதனைப்போல் கர்வங்கொண்டால் ஆபத்து வரும். அர்ஜுனன்போல் குருபக்தி இருந்தால் க்ஷேமமுண்டாகும்.

வாரவிருத்தாந்தம்.

உண்மையான ஆண்டுவிழா. சென்றமீ 27உ சிதம்பரத்தில் சாச்வதவிதிபஜனையின் எட்டாம் ஆண்டுவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. ஏனைய சபைகளைப்போல் லௌகிகத்தில் சிறந்த அதிகாரியை அழைத்து மாலையிட்டுக்கைகொட்டி காபி டீயோடு நிற்காமல் நமது தேசியவழியில் மகா பிராமணர்களுக்கு ஸமாராதனையும் 200, ஏழைகளுக்கு அன்னமுமளித்து ஆண்டுவிழா நடைபெற்றது. இங்ஙனம் மற்ற ஸபைகளும் அன்னதானம் முதலிய தர்மங்களோடு அப்தபூர்த்திசெய்தால் அழகாகயிருக்கும்.

பிரும்மஸ்ரீ யஜ்வாவின் உபதேசம். 28உ மூன்று தினம் நாகப்பட்டணம் ஹிந்துமதாபிமான சங்கத்தில் பிரும்மஸ்ரீ வேதாரண்யம் நாராயணயஜ்வா அவர்கள் அழகாக வைதிக தர்மத்தைப் பற்றி மூன்று உபன்யாஸம்செய்தார்கள். ஸகல கலைகளிலும் பூர்ண பாண்டித்யம்பெற்று பரம வைதிக ச்ரத்தையுடன் தானே நன்கு அநுஷ்டானம்செய்துவரும் இத்தகையமஹாபுருஷர்களே உபதேசஞ்செய்வதற்கேற்ற ஸதாசார்யராவார்கள். இதைக்கேட்ட பாக்யசாலிகள் அநுஷ்டானத்திற்குக் கொண்டுவந்தால் இஹபர சுகம்பெறுவர்.

இந்திய உடையின் சிறப்பு. 29உ லீடர் என்ற பத்திரிகையில் பி. கெ. யி. பின் என்ற ஒரு கனவான் ஷை விஷயமாக ஓர் கட்டுரை வரைந்திருக்கிறார். இவர் எழுத்திலிருந்து ஆங்கில ஆசாரத்தையே புருஷார்த்தமாகப் போற்றிவந்த இந்தியரிவரெனத் தோன்றுகிறது. ஆங்கிலரைப்போல் நாம் வேஷம்போடுவதனால் உண்டாகும் விபரீதங்களையும் அடிமைப் புத்தி, டாம்பிகம், துராசாரம் முதலியவைகளையும் விலக்கிதான் தற்போது உடுத்திவரும் இந்திய உடையினால் உண்டாகும் நன்மையையும் விரிவாக எழுதி

இருக்கிறார். தேசாபிமானி என்றுகூறிக்கொண்டு அன்ய அநாசாரத்தை விருத்திசெய்யும்சிலர் இதைக்கண்டேனும் மோக்ஷத்தை விடுவாரா?

ஆஸ்திகர் வாழ்க! 30௨ திருத்தாப்பூண்டியில் பிரும்மஸ்ரீ சேங்காலிபுரம் அப்பாஸாமி சாஸ்திரிகளால் நடத்தப்பட்டுவந்த ஸ்ரீமத் ராமாயண உபன்யாஸம் முடிந்து பட்டாபிஷேகம் சிறப்பாக நடந்தது. ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீசங்கரபகவத்பாதாள் அநுக்ரஹித்த சால்வை ஊர்வலமாகக் கொண்டுவரப்பட்டு ஸ்ரீ சாஸ்திரிகளவாளுக்களிக்கப்பட்டது. புராணத்வாராதர்மப்ரவசனம் செய்வதே தற்காலத்திற்கேற்ற மதப்ரசாரவழி. சின்ன காஞ்சீவரத்தாழ்வார் ஸன்னதியிலும் ஸ்ரீராமாயண உபன்யாஸம் நடக்கிறது.

கலியிலும் சிபியா? 4௨ பெஷாவாரில் ஓர் வைத்யர் ஒரு நோயாளி உயிரைக் காக்கத் தன் உடலிலிருந்து 40 ஔன்ஸ் ரத்தத்தைக் கொடுத்தாராம். தன் உடல் வலி குறைந்து ப்ராணனுக்கே ஆபத்து வருமென்றுணர்ந்திருந்துமிப்படிசெய்த வைத்யரைச் சிபியென்று கூறுவது வேறென்ன சொல்வது?

காலத்திற்கேற்ற தர்மம். 4௨ கும்பகோணத்தில் ப்ரவஸர் ஸ்ரீமான் சுந்தராமய்யர் முன்னிலையில் தண்ணீர்பந்தல் தர்மம் ஆரம்பிக்கப்பட்டது. இது ஸ்ரீமான் ஐயுவய்யர் ஸ்ரீமதி லக்ஷ்மி அம்மாள் இவர்களது தர்மத்தால் நடக்கும். இவர்கள் தர்மத்தில் சிறந்த புண்யபிறவிகள். மற்றும் பல தர்மம் செய்திருக்கின்றனரென்றாலும் இவ் வுஷ்ணகாலத்தில் இந்தத் தர்மத்திற்கு ஈடு எதுவுமாகாது, ப்ரியமானசொல் குளிர்ந்த தீர்த்தம். நல்ல நிழல். இது ஸகல ஜனங்களும் அனுஷ்டிக்கத்தக்க அரியதர்மம்.

வேதசாஸ்த்ர வித்யாலயம். மண்டகுளத்தூர் என்பது வட ஆற்காடு ஜில்லா போளூரைச்சார்ந்த கிராமம். பல வேதசாஸ்த்ர வித்வான்கள் பிறந்தவூர் அது. ஸ்ரீசங்கரஜயந்தியைப் பல ஆண்டுகளாக விசேஷமாய்நடத்தும் அக்ரஹாரம் ஸ்ரீஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள் பாதபாம்ஸு பட்டநாளாக அங்குஓர்வேதசாஸ்த்ர பாஷ்யபாடம் நடக்கும் வித்யாசாலை தோன்றி நடக்கிறது. பிரும்மஸ்ரீ கங்காதரபுரம் நாராயணசாஸ்த்ரிகளவர்கள் ச்ரத்தையுடன் ஸகலபாடங்களையும் நடத்திவருகிறார். ஆஸ்திக கனதனவான்கள் ச்ரத்தைகொண்டு இதை மேல்மேலும் விருத்திக்குக் கொண்டுவரவேண்டுகை. ஸ்ரீவத்ஸ வே- ஸோமதேவசர்மா.